# களத்தில்

விசேட பதிப்பு

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித்தாள் 04 - 11 - 96


# அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கஜன் பாரிசில் எதிரியால் சுடப்பட்டுப் படுகொலை


## -புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் சிரம்தாழ்த்தி வீரவணக்கம் - பணி தொடர்ந்து அவர்களின் கனவுகளை நனவாக்க சூளுரை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்) அவர்களும், பாரிசில் இருந்து வெளியாகும் ஈழமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரான்சுக் கிளையின் முக்கிய செயற்பாட்டாளருமான திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) அவர்களும் எதிரியின் திட்டமிட்ட சதிச் செயலால், 26-10-96 அன்று பிற்பகல் 6.50 மணியளவில் பாரிசில் 'லாச்சப்பல்' எனும் இடத்தில் வைத்து இனந் தெரியாதோரால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழத் தேச விடுதலைக்காக, எந்நேரமும் அச் சிந்தனையுடனேயே அயராது உழைத்த இவ்விரு தேசிய வீரர்களுக்கும் சிரம் தாழ்த்தி வீரவணக்கம் செய்யும் புலம் பெயர் வாழ் தமிழீழ மக்கள், அவர்கள் செய்த பணிகளைத் தொடரவும், அவர்களின் கனவுகளை நனவாக்கவும் சூளுரை செய்து நிற்கின்றனர்.

1984ஆம் ஆண்டு முதல் தமிழீழ

தொடர்ச்சி- 3 ம் பக்கம்



### அஞ்சலியும் அர்ப்பணமும்


அரக்கியின் குண்டுகளால்
அந்நிய மண்ணில் கொப்பளித்த
உங்கள் குருதி ஆயிரமாயிரம்
விடுதலை வேங்கைகளைப் பிரசவிக்கும்.

தாய் நிலத்தின் விடிவிற்காய்
உயிர் நீத்த விடுதலை வீரர்களே!
தமிழர்களின் இலட்சியமாம்
தமிழீழத் தாயகத்தை வென்றெடுக்க
எமது இறுதி மூச்சு இருக்கும்வரை
உங்கள் வழியில் விடுதலைப் பயணத்தை
உறுதியுடன் தொடர்வோம் என
சபதமெடுத்து அஞ்சலித்து நிற்கின்றோம்!

தமிழீழ விடுதலைக்காய் குரல்
கொடுத்து வரும் 'களத்தில்'
செய்தித்தாள் வளர்ச்சிக்காக
அவ்வப்போது நீங்கள் அளித்த
ஆலோசனைகளுக்கும்,
அறிவுரைகளுக்கும்
இவ்விசேட பதிப்பினை
'அர்ப்பணம்' செய்கின்றோம்.



லெப். கேணல் நாதன்
( கந்தையா பேரின்பநாதன் )
தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர்



பத்திரிகையாளர் கஜன்
( கந்தையா கஜேந்திரன் )
'ஈழமுரசு' பத்திரிகை பிரதம ஆசிரியர்

## படுகொலையைக் கண்டித்து பிரான்ஸ் தூதுவர் இல்லம் முன் விழிப்புப் போராட்டம்

**26-10-96** அன்று பாரிஸ் மாநகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்பநாதன் அவர்களும், பாரிசில் இருந்து வாரந்தோறும் வெளியாகும் 'ஈழமுரசு' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான திரு. கந்தையா கஜேந்திரன் அவர்களும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, 30-10-96 அன்று புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை இலண்டனில் பிரித்தானியாவிற்கான பிரான்ஸ் தூதுவர் இல்லம் முன்பாக தமிழ் மக்களினால் விழிப்புப் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

தொடர்ச்சி- 6 ம் பக்கம்




**தமிழின விடுதலையை நசுக்க முனையும் எதிரியின் சதிச்செயலை இனம் காண்போம்.**

-விடுதலைப் புலிகளின்
அனைத்துலகச் செயலகம்

அறிக்கையின் முழு
விபரமும் உள்ளே

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

## தமிழின விடுதலையை நசுக்க முனையும் எதிரியின் சதிச்செயலை இனம் காண்போம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசப் பரிமாணத்தைக் குலைத்துவிடும் சிறிலங்கா அரசின் நோக்கம், மனிதப் படுகொலை வடிவம் எடுக்கத் தொடங்கிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான வகையில், அனைத்துலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதரவுச் செயற்பாடுகளை முடக்கி விடுவதற்குச் சிறிலங்கா அரசு, பகீரத முயற்சிகளை எடுத்து வரும் இன்றைய காலகட்டத்தில், பாரிஸ் நகரில் 26-10-96 அன்று மாலை 6.50 மணியளவில், எமது இரு முக்கிய செயற்பாட்டாளர்கள் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடுவதற்கு வகுக்கப்பட்டுள்ள நாசகாரத் திட்டத்தின் ஓர் அம்சமாகவே, இச்சம்பவத்தையும் நாம் நோக்க முடியும்.

சிறிலங்கா அரசின் பின்னணியுடனேயே மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடிய இப் படுகொலைகள், இரு முக்கிய செயற்பாட்டாளர்களை நோக்கி, குறி வைத்ததாக இருக்கின்றன. இவ் இலக்குகள் மிகவும் திட்டமிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. எமது இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளரான திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்), ஈழமுரசுப் பத்திரிகை ஆசிரியர் திரு.கந்தையா கஜேந்திரன் (கஜன்) ஆகியோரே திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

எமது இயக்கத்தின் சர்வதேசச் செயற்பாடுகளில் 1984 ம் ஆண்டு முதல், முழு நேர உறுப்பினராக இருந்து இயங்கி வந்த திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்), சர்வதேச வேலைகளில் சில முக்கிய பொறுப்புகளைச் சுமந்து நின்றவர். பல்வேறு கால கட்டங்களில் இயக்கம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட காலங்களில் எல்லாம், உற்சாகத்துடன் இயக்கப் பணிகளில் ஈடுபட்டவர். பல்வேறு நாடுகளின் மூலை முடுக்குகளிலெல்லாம் அலைந்து திரிந்து, எமது மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்ற அவாவுடன் அரும் பணி ஆற்றியவர். இவரது செயற்பாடுகள் எமது தாயக பூமியிலே, எமது போராளிகளும் மக்களும் கண்ட பல வெற்றிகளுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்தது.

திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையின் முக்கிய செயற்பாட்டாளராக நீண்டகாலமாக இயங்கிவந்தவர். கலை, இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ் மக்கள் மத்தியிலான அரசியல் வேலைகளிலும், கலை, இலக்கிய முயற்சிகளிலும் உற்சாகமாக இயங்கி வந்தவர். 1995 ம் ஆண்டு தை மாதம் "ஈழமுரசு" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து, அதன் ஆசிரியராகவும் இருந்து பத்திரிகையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்தவர்.

### இப் படுகொலைகளின் பின்னால் என்ன நோக்கம் இருந்திருக்கக்கூடும் ?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்கி விடுவதற்கு, போராட்டத்திற்கு வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கிடைத்து வரும் நிதிப் பங்களிப்பினைத் தடைசெய்வது அவசியம் என்பது, எதிரியின் முக்கிய அவதானிப்பாக இருந்து வந்துள்ளது. போராட்டத்திற்கான இந்நிதிப்பலம், எதிரியின் இராணுவ ஆக்கிரமிப்பினை முறியடிப்பதற்கு அவசியமான, தமிழர் படையணியின் பலத்தினை அதிகரிப்பதற்கு அவசியமானதாகவும் இருந்து வருகின்றது. போராட்டத்திற்கு இத்தகைய நிதிப்பலம் சென்றடைவதற்கு, சர்வதேச நிதிப் பொறுப்பாளராக இயங்கி வந்த நாதனின் பணி முதுகெலும்பு போன்றது. இந்நிதிப்பலம் போராட்டத்தினைச் சென்றடைவதைத் தடுப்பதற்காக, மக்கள் போராட்டத்தின் வெற்றிக்காக மனம் உவந்து அளிக்கும் பங்களிப்பினை, பயமுறுத்திச் சேகரிக்கப்படும் நிதியாகச் சித்தரிப்பதற்குச் சிறிலங்கா அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சிகள் வெற்றியளிக்காத சூழலில், போராட்டத்திற்குச் சென்றடையக்கூடிய நிதியினைத் தடுப்பதற்குச் சர்வதேச நிதிப்பொறுப்பாளரான நாதன் மீது குறிவைக்கப்பட்டதாக நாம் உணரமுடியும்.

"ஈழமுரசு" பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.கஜன், புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள பல்வேறு தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் இருக்கக்கூடிய சில கருத்து வேறுபாடுகளை, ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் மூலம் வெற்றிகொண்டு, "ஈழமுரசு" பத்திரிகையினூடாக அவர்களையும் விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து வந்தவர். "பாலம்" என்னும் சஞ்சிகையின் மூலம் மக்கள் பிரச்சனைகளுடன் இணைந்து நின்றவர். வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்களைப் போராட்டத்தோடும் தாயக நினைவுகளோடும் இணைத்து வைப்பதற்கு, இவர் ஆற்றி வந்த பங்கு அளப்பரியது. இவை போதாதா, எதிரி இவர் மீதும் குறிவைப்பதற்கு?

இவர்களைக் கொன்றொழித்து விடுவதன் மூலம், இவர்கள் ஆற்றி வந்த பணிகளை முடக்கச் செய்வது மட்டுமன்றி, தமிழீழ விடுதலைக்கு ஆதரவு வழங்கி வரும் தமிழீழ மக்கள் மத்தியில் பதட்டத்தினையும் பயப்பீதியினையும் குழப்பத்தினையும் உண்டு பண்ணி, போராட்டத்தின் சர்வதேசச் செயற்பாடுகளைப் பாதிப்புறச் செய்யும் சதித்திட்டம், இச்சம்பவத்தின் பின்னால் உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசப் பரிமாணம் முடக்கப்படுமானால், போராட்டத்தினை நசுக்கி விடுவது இலகு என்ற சிந்தனையுடன் செயற்பட்டு வந்த சிறிலங்கா அரசு, இச்சம்பவத்துடன் தொடர்புபட்டதாக இருக்கும் என்பது, இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு விடயமே. மற்றும் எமது தாயக பூமியிலே, சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் எமது மக்கள் படும் சொல்லெண்ணாத் துயரங்களைச் சர்வதேச மயப்படுத்துவதற்காக, சர்வதேச தமிழர் சம்மேளனத்தால் 30-10-96 முதல் 05-11-96 வரையிலான காலப் பகுதிக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட, அனைத்துலகக் கவன ஈர்ப்பு வாரத்திற்கான முன்னேற்பாடுகள், உற்சாகமாக நடைபெற்று வந்த இந்த நேரத்திலேயே, இப்படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன என்பதுவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

இப்படுகொலைகளை, வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஒரு சவாலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். இச் சம்பவத்தினால் உணர்ச்சி வசப்பட்டு, தேவையற்ற விதத்தில் கொதித்து எழுவதோ அல்லது ஒரு வித பய உணர்வுடன் ஒதுங்கிக் கொள்வதோ, இப் படுகொலைகளைத் திட்டமிட்டு நடாத்தியவர்களின் நோக்கத்திற்குத் துணை புரிவதாக அமைந்து விடும். இதனால், எமது மக்கள் நிதானமாகவும் அதே நேரம் மிகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். எத்தகைய அழுத்தங்களையும் எதிர் கொண்டு முன்னேறும் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசச் செயற்பாடுகளுக்கு, எதிரி போட முனையும் அனைத்துத் தடைகளையும் உடைத்து, எமது மக்களுக்கான சர்வதேசப் பலத்தினையும் நாம் அளிப்போம் என்பதில் உறுதி கொள்ள வேண்டும்.

எமது அன்புக்குரிய இருவரையும் இழந்த சோகம், எம் நெஞ்சில் ஆழமாகப் பொதிந்திருப்பினும், வாடிநின்று வேதனையாகத் துவண்டு விடுவதால் பயன் ஏதும் வரப்போவதில்லை. இவ் இருவரும், எந்த இலட்சியத்திற்காக அயராது உழைத்தார்களோ, எந்த நோக்கத்திற்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்தார்களோ, அதற்காகத் தளராத உறுதியுடன் உழைப்பதே, இவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "

வெளியீடு
அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

# சவாலை எதிர்கொள்வது எப்படி?

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்பநாதன் (நாதன்) விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியக நீண்ட கால உறுப்பினரும் 'ஈழமுரசு' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான திரு. கந்தையா கஜேந்திரன் (கஜன்) ஆகியோர் பாரிசில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை, சிறிலங்கா அரச பயங்கரவாதம் தனது எல்லைகளை விரித்துள்ளது என்பதனையே வெளிப்படுத்துகிறது.

தமிழீழ விடுதலைப் போரினை நசுக்கி, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைத் தமிழ் மக்கள் மீது திணித்துவிடத் துடிக்கும் பேரினவாதப் பூதம், தனது இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஐரோப்பாவிலும் தமிழர்களை விழுங்கத் தொடங்கியிருக்கிறது.

தமிழீழ விடுதலையினையே தமது தாகமாகக் கொண்டு இயங்கிய இவ் இரு தேசிய வீரர்களும், எதற்காகப் பலி கொள்ளப்பட்டிருப்பார்கள் என்பதனை விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை விளக்கியிருக்கும். அதேவேளை, தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் கோரியிருக்கிறது.

இக் கொலைகளைப் புரிந்த கொலையாளி ஒரு தனி மனிதனாக இருக்க முடியாது. அவனைச் சுற்றி ஒரு வலைப் பின்னல் இருந்திருக்க வேண்டும். இவ் வலைப் பின்னலுக்கு சிறிலங்காவின் நாசகார இரகசிய வேலைகளைச் செய்யும் கட்டமைப்புக்கும் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும்.

இவ் இருவரும் ஆற்றிய பணிகளை முடக்கி விடுவது மட்டும் இக் கொலைகளைப் புரிந்தவர்களின் நோக்கமாக இருந்திருக்க முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்பில், உயிரிழப்பால் ஏற்படும் வெற்றிடங்கள் உரிய முறையில் பதிலீடு செய்யப்படும் என்பதனை கொலைஞர்கள் அறிந்திராமல் இருந்திருக்க முடியாது. இருப்பினும், அனுபவம் வாய்ந்த இருவரைக் கொன்றொழித்து விடுவதன் மூலம், போராட்டத்திற்கான சர்வதேசச் செயற்பாட்டில் சில தடங்கல்களை ஏற்படுத்துவதோடு, தமிழ் மக்கள் மத்தியில் ஒருவகையான பயப் பீதியினை ஏற்படுத்தி, விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகளை முடக்கிவிடும் வஞ்சக நோக்கம் இக் கொலைகளின் பின்னால் உள்ளது.

பொதுவாக, விடுதலைப் புலிகள் தரப்பில் வெளியிடப்படும் செய்திகளை முற்றாகவே மறைத்துவிடும் சிறிலங்கா அரசின் செய்சித் தொடர்புச் சாதனங்கள், இக் கொலைகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் தொடர்பிருக்கிறது என்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் குற்றச்சாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திவெளியிட்டிருக்கின்றன. அரச தரப்புப் பேச்சாளர் இக் குற்றச்சாட்டுக் குறித்து எதுவித கருத்தினைத் தெரிவிக்க மறுத்துமிருக்கிறார்.

இதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் "எப்படி எங்கள் வேலை" என்ற வகையிலான ஒரு மறைமுக உரிமை கோரலை சிறிலங்கா அரசு செய்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயற்பாடுகளை முடக்கிவிடுவதில் எவ்வளவு தீவிரமாகச் செயற்படுகிறோம் என்பதனை சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்த அரசு விரும்பியிருக்கிறது.

அதேவேளை, உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், சிறிலங்காவின் அரச பயங்கரவாதம் ஐரோப்பாவிற்கும் தனது காலை நீட்டியுள்ளது என்ற அடிப்படையில் அரசுக்கு எதிரான அரசியல் செயற்பாட்டினை மேற்கொள்ள ஆரம்பிப்பதனை அவதானித்துவிட்டு, தமது இராணுவத் தரப்புப் பேச்சாளரை வைத்து, "இது உள்வீட்டு வேலை" என்ற பொய்ப் பிரச்சாரத்தை நடாத்த ஆரம்பித்துள்ளது அரசு.

"இரண்டு தரப்பும் மாறி மாறி குற்றம் சாட்டுகின்றன" என்கின்ற நிலையினை சர்வதேச அரங்கில் ஏற்படுத்திவிட்டால், தம்மீது முழுமையான பழி வராமல் தடுத்துவிடலாம் என்பதுவும் அரசின் இப் பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கான ஒரு நோக்கமாகும்.

சிறிலங்கா இராணுவத் தரப்பு பொய் பேசுவது புதியதொரு விடயமல்லவே. அவர்கள் உண்மை பேசினால் தான் அது ஆச்சரியத்திற்குரியதாக இருக்கும். இருப்பினும், சர்வதேச அரங்கில் அரசு கூறும் பொய்களுக்கும் செய்தித் தொடர்பு சாதனங்களில் இடம் கிடைத்து வருவதனால் அப் பொய்ப் பிரச்சாரத்தினை முறியடிக்கவும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தீவிரமாக உழைக்க வேண்டும்.

இக் கொலைகளின் மூலம் அரசு சாதிக்க நினைத்ததை முறியடிப்பதே இதற்கு உரிய பதிலடியாக இருக்கும். போராட்டத்திற்கான சர்வதேசச் செயற்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதன் மூலமே அரசின் முகத்தில் நாம் கரியினைப் பூச முடியும். இருவரை அழித்தால் அவ்விடத்தினை நிரப்பக் குறைந்தது இருபது பேர் புதிதாய் எழுவர் என்பதனை கொலைஞர்கள் புரிந்து கொள்ள வைக்க வேண்டும். போராட்டத்தின் சர்வதேச செயற்பாடுகள் எத்தகைய தடைகளையும் தாண்டித் தொடரும் என்பதனை வெளிப்படுத்த வேண்டும். சிறிலங்கா அரச பயங்கரவாதத்தினை உலகின் மூலை முடுக்கெல்லாம் அம்பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் போராட்ட நியாயங்கள் நன்கு சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டும். போராட்டத்திற்கான நிதிப் பலம் மேலும் பல மடங்கு பல்கிப் பெருக வேண்டும்.

உலகத் தமிழ் மக்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட சவாலாகவே, இச் சம்பவத்தை நோக்கி, எத்தகைய சவாலினையும் எதிர்கொள்ளும் வகையில் உலகத் தமிழினம் போராட்டத்துடன் இணைந்து நிற்க வேண்டும்.

இதுவே அரச பயங்கரவாதத்தினால் தம்முயிர் ஈந்த இவ்விரு தேசிய வீரர்களுக்கும் நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகவும் இருக்கும்.

சிங்களப் பேரினவாத அரசின் பயங்கரவாத நடவடிக்கைகள் ஐரோப்பாவிற்கும் விரிவடைந்துள்ளதை உணர்ந்து கொண்ட தமிழ் மக்கள், இதற்குக் கண்டனம் தெரிவித்தும், இப் படுகொலைகளுக்கான உரிய நீதி விசாரணை நடாத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் அரசைத் அதன் தூதுவர் மூலமாகக் கேட்டுக் கொண்டனர்.

'தமிழர் மனித உரிமை மையம்' ஒழுங்கு செய்த இவ் விழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், இப் படுகொலைகள் தொடர்பான விளக்க சுலோகங்களைத் தாங்கிய பதாதைகளுடன் காணப்பட்டனர். இவ்விழிப்புப் போராட்டம் லண்டனின் பிரபலமான இடத்தில் நடைபெற்றமையால், வீதியில் வாகனங்களிலும், நடந்தும் சென்ற பெருமளவு மக்கள் இச் சுலோகங்களை வாசித்துக் கொண்டு சென்றதனையும், உல்லாசப் பிரயாணிகள் என்ன விடயம் என்பதனை கேட்டுச் சென்றதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சிறிலங்கா இனவெறி அரசின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை இம்மக்களும் உணர்ந்திருப்பார்கள் என்பதனையும் இங்கு காணலாம்.

"சிறிலங்கா அரசின் பயங்கரவாதத்தை பிரான்ஸ் மண்ணில் அனுமதிக்காதே!"

ஒரு பத்திரிகையாளனைக் கொலை செய்து ஐ.நா.வின் சட்டத்தினையும் மீறியுள்ளது சிறிலங்கா அரசு"

"சந்திரிகாவின் அமைதிக்கான போர் பாரிசுக்கும் சென்றுவிட்டது"

போன்ற சுலோகங்களும் காணப்பட்டன.

பகல் 12.30 மணியளவில் மகஜர் ஒன்று 'தமிழர் மனித உரிமை மையத்தின்' சார்பாக

## பாரிஸ் படுகொலை சிங்கள அரசின் பயங்கரவாதத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது - பழ. நெடுமாறன்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசச் செயலகத்தின் நிதி காப்பாளர் நாதன், "ஈழமுரசு" இதழின் ஆசிரியர் கஜன் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டு ஆறாத் துயரமும் அதிர்ச்சியும் அடைந்தேன். பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிசில் நடைபெற்றுள்ள இந்தப் படுகொலை சிங்கள அரசின் பயங்கரவாதத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளது. இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவித்துவரும் சிங்கள அரசின் கொலைக் கரங்கள் அந்நிய நாடுகளுக்கும் நீண்டுவிட்டன. இக் கொலைவெறிச் செயலை உலகநாடுகள் கண்டனம் செய்யும் என நம்புகிறேன்.

கொலையுண்ட தோழர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் ........

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலகச் செயற்பாடுகளில் முழு நேர உறுப்பினராக இயங்கி வந்த நாதன் அவர்கள், சில முக்கிய பொறுப்புக்களை ஏற்று செவ்வனே செய்து எமது தாயகத்தில் எமது போராளிகளும் மக்களும் கண்ட பல வெற்றிகளுக்குப் பெரிதும் உறுதுணையாக நின்ற அன்பு நெஞ்சினர்.

கலை, இலக்கிய ஆர்வலரும் கவிஞருமான கஜன் அவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையின் முக்கிய செயற்பாட்டாளராக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்தார். 1995ஆம் ஆண்டு தை மாதம் முதல் ஈழமுரசு பத்திரிகையினைத் தொடங்கி அதனைச் சிறப்பான முறையில் நடாத்தி வந்ததும் அல்லாமல், "பாலம்" ஆய்வுச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் அரும் பணியாற்றி வந்தார்.

இவர்களது மக்கள் நல சேவைகளை இனங்கண்ட சிறிலங்கா அரச பயங்கரவாதம், தனது வக்கிரமான போக்குத் தன்மையை தனது நாட்டெல்லைகளையும் தாண்டி, இவர்களைத் தனது பயங்கரவாதச் செயலுக்கு இலக்குகளாக்கியுள்ளது. மிகவும் திட்டமிட்ட முறையில் குறித்த இலக்குகளை நோக்கி நடாத்தப்பட்டுள்ள இப் படுகொலை, சிறிலங்கா அரசின் பின்னணியிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடியவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச அங்கீகாரத்தையும் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதற்கென திட்டமிட்ட முறையில் சிறிலங்கா எடுத்துவரும் சர்வதேச சதிச் செயல்களின் ஒரு அம்சமாகவே இப் படுகொலைகள் அமைகின்றன.

இப் படுகொலைகள் குறித்து சர்வதேச அமைதி விரும்பிகளும், மனித உரிமை இயக்கங்களும், பத்திரிகைகளும் பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

'யூலியன் லாலா படுகொலை' இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய வலிமை கொடுத்து, வெற்றி இலக்கை நோக்கித் திருப்பியதைப் போல - இப் பாரிஸ் படுகொலையும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய வலிமை சேர்த்து - அதை விரைவு பெற வைக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இப் படுகொலை மூலம், "சிறிலங்காவின் அனைத்துலகப் பயங்கரவாதத் தோற்றம்" உறுதியாகியுள்ளது. இப் படுகொலைகள் மூலம் சிறிலங்கா சாதிக்க நினைத்த சர்வதேசப் பரிமாணத்தைக் குலைத்தல், நிதி வளங்களைத் தடுத்தல் ஆகிய இரு செயற்பாடுகளையும் முறியடிக்கும் முயற்சிகளை உறுதியுடன் தொடர்வதே இத் தேசிய வீரர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

இதற்கான உடலுழைப்பை உள உறுதியுடன் வழங்கியும், தமிழீழத்துக்கான நிதித் தேவைகளை நிறைவு செய்வதினை உறுதிப்படுத்தியும், தமிழீழத் தேசிய விடுதலை எனும் தேசக் கனவு நனவாக உழைப்பதின் மூலமே, இத்தியாகிகளுக்கு நாம் நிலையான அஞ்சலியைச் செய்ய முடியும்.

## "என் இனியவளுக்கு...." என்ற நூலிலிருந்து

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கூட நிம்மதியாக வாழ முடியாது. எங்கும் சுதந்திரம் இல்லை. எமக்கென்றொரு நாடு அமையும் போதுதான், நாம் எங்கென்றாலும் கௌரவமாக வாழ முடியும். எமது போராட்டத்திலே எத்தனை இன்னல்கள் வந்தாலும் நாம் தாங்கி நின்று போராடி வெற்றி பெற வேண்டும். மக்களின் அவலங்களும், கஸ்டங்களும் என்னை மிகவும் வாட்டுகின்றன. ஆனால் இப்ப கஸ்டப்படுவதற்குப் பயந்து போராட்டத்தைக் கைவிட்டால், எமது இனம் என்றைக்குமே நிம்மதியாக வாழ முடியாது. எமது இனமே வாழ முடியாத நிலையும் ஏற்படும். அதனால் நாம் எந்தக் கஸ்டத்தையும் தாங்கிப் போராடுவோம்.

நாம் எமது ஆதரவாளர்களுக்கு மட்டும் தமிழீழம் எடுக்கப் போராடவில்லை. அனைவருக்கும். எம்மை ஆதரிப்பவர்கள், ஆதரவளிக்காதவர்கள், எதிர்ப்பவர்கள் இப்படியாக ஒட்டு மொத்தமாக அனைத்து மக்களுக்காகவுந்தான் போராடுகின்றோம். இதில் நம்பிக்கையுடனும் தெளிவுடனும் இருக்கின்றோம். ஆனால், ஓர் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, அப்போராட்டத்தை அழிக்க நினைப்பவர்களையும் அதற்குத் துணை போபவர்களையும் நாம் சகித்துக் கொள்ள முடியாது.

# எங்களுக்காக நீங்கள்!



**லெப்.கேணல் நாதன்** ( கந்தையா பேரின்பநாதன் - அரியாலை)

விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர்

மண்ணில்: 10.11.1964 மண்ணுக்காக: 26.10.1996

" உலகமே ! உண்மைக்கு ஓர் இடமிருந்தால் - எம்
உரிமைக்கு குரல் கொடு"

" IF TRUTH EXISTS - THEN
PLEASE SPEAK OUT FOR OUR RIGHTS " - நாதன்

எங்களுக்காய்
உங்களுக்காய்
நீங்கள் வீழ்ந்த
நாங்கள் எழுகி
நீங்கள் செய்த
எங்கள் வாழ்க்
நீங்கள் நடந்த
நாங்கள் இனி
ஆகையால் தா
எங்களுக்காய்
உங்களுக்காய்
தமிழீழ வரலா
அழியாது வாழ்

ஒரு விடுதலை
சாதாரண மர
அந்தச் சாவு ஒ
உன்னத இலட்
அற்புதமான நிக
ஒரு விடுதலை
அவனது உயிர
இலட்சிய நெ
அணைந்து விடு
இலட்சிய நெருப்
சக்தியாக மற்ற
கொள்கிறது.
தேசிய ஆன்
யெழுப்பி விடுகி
தமிழீழத்